பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை – 4

25 06 2024 **TUESDAY** **12.40 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மக்களவைத் தலைவர் பதவிக்கு தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் திரு ஓம். பிர்லாவும், எதிர்க்கட்சி வேட்பாளராக திரு கொடிக்குன்னில் சுரேஷும் போட்டியிடுகின்றனர்.

2. மக்களவைக்கு தேர்வு செய்யபப்பட்டுள்ள தமிழகத்தை சேர்ந்த உறுப்பினர்கள் இன்று பதவியேற்கின்றனர்.

3. நீட் முறைகேடுகளை ஆய்வு செய்வதற்கு அமைக்கப்பட்ட உயர்மட்டக்குழுவின் முதல் கூட்டம் இன்று புதுதில்லியில் தொடங்கியது.

4. தமிழகத்தில் 2026-ஆம் ஆண்டுக்குள் 75 ஆயிரம் அரசு பணியிடங்கள் நிரப்பபப்படும் என்று சட்டப்பேரவையில் இன்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

5. உலகக் கோப்பை ட்வெண்ட்டி - ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் பங்களாதேஷ் அணியை வென்று ஆப்கானிஸ்தான் அரையிறுக்கு முன்னேறியுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>

மக்களவைத் தலைவர் பதவிக்கு நாளை தேர்தல் நடக்கவுள்ள நிலையில், தேசிய ஜனநாயக கூட்டணி சார்பாக திரு ஓம். பிர்லா வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ளார்.

மத்திய அமைச்சர்கள் திரு ராஜ்நாத் சிங், திரு அமித் ஷா, திரு பியூஷ் கோயல் ஆகியோர் அவரை ஆதரிப்பது தொடர்பாக, எதிர்க்கட்சித் தலைவர்களுடன் இன்று ஆலோசனை நடத்தினர்.

காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் திரு கே சி வேணுகோபால், மற்றும் திமுக-வின் மூத்த தலைவர் திரு டி ஆர் பாலு ஆகியோருடன் அவர் ஆலோசனை மேற்கொண்டதில், எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை.

இதனையடுத்து, காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் திரு கொடிக்குன்னில் சுரேஷ், எதிர்க்கட்சிகளின் வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ளார்.

இந்நிலையில், பிஜேபி-யின் நாடாளுமன்ற உறுப்பினரும், மக்களவை முன்னாள் தலைவருமான திரு ஓம். பிர்லா, வேட்புமனு தாக்கல் செய்துள்ளார்.

திரு கொடிக்குன்னில் சுரேஷும் இன்று வேட்புமனு தாக்கல் செய்ய உள்ளதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

இந்த தேர்தல் குறித்து செய்தியாளர்களிடம் பேசிய காங்கிரஸ் கட்சியின் மக்களவைத் தலைவர் திரு ராகுல்காந்தி, பிரதமரின் வேண்டுகோளின்படி, ஆக்கப்பூர்வமான முறையில் ஒத்துழைக்க எதிர்க்கட்சிகள் விரும்புவதாகவும், பாரம்பரிய முறைப்படி மக்களவை துணைத்தலைவர் பதவிக்கு காங்கிரஸ் வேட்பாளர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்றும் கூறினார்.

<<<<<<>>>>>

மக்களவைக்கு தேர்வு செய்யப்பட்டுள்ள உறுப்பினர்கள் இரண்டாவது நாளாக இன்று பதவியேற்றுக்கொண்டு வருகின்றனர்.

தமிழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் இன்று பதவியேற்றுக்கொள்கின்றனர்.

இடைக்கால அவைத்தலைவர் திரு. **Bhartruhari Mahtab** புதிய உறுப்பினர்களுக்கு பதவிப்பிரமாணம் செய்து வைக்கிறார்.

<<<<<<>>>>>

நீட் முறைகேடுகளை ஆய்வு செய்வதற்கு அமைக்கப்பட்ட உயர்மட்டக்குழுவின் முதல் கூட்டம் இன்று புதுதில்லியில் தொடங்கியது.

இஸ்ரோ முன்னாள் தலைவர் திரு ராதாகிருஷ்ணன் தலைமையில் ஏழு பேர் கொண்ட குழு களநிலவரங்களை ஆய்வு செய்து வருகிறது.

இதில் பங்கேற்ற திரு ராதாகிருஷ்ணன், மாணவர்கள் மற்றும் பெற்றோர்களின் கருத்துக்களை பரிசீலனை செய்வதோடு, அவர்களுடன் பேசவும் இக்குழு தீர்மானித்துள்ளதாக தெரிவித்தார்.

தேர்வுகளை தொடங்குவதற்கான ஒரு வலுவான அமைப்பு உடனடியாக கட்டமைக்கப்படும் என்றும் திரு ராதாகிருஷ்ணன் குறிப்பிட்டார்.

இதனிடையே, இளநிலை மருத்துவப்படிப்புக்கான நீட் தேர்வில் முறைகேடுகள் நடந்ததாக பீகார், குஜராத், ராஜஸ்தானில் பதிவு செய்யப்பட்ட ஐந்து வழக்குகள் சிபிஐ வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

பீகார் காவல்துறையின் பொருளாதார குற்றப்பிரிவு விசாரித்துவரும் நீட் வினாத்தாள் கசிவு வழக்கினையும் விசாரிக்க இருப்பதாக சிபிஐ அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேலும், மகாராஷ்ட்ரா மாநிலம் லாத்தூரில் பதிவான மற்றொரு வழக்கையும் சிபிஐ விசாரிக்க இருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>

இந்தியாவின் ஜனநாயகத்தில் கருப்பு தினமாக நினைவுகூரப்படும் அவசர நிலை தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.

இந்நாளில் ஜனநாயகத்தை காப்பாற்றுவதற்காக எதிர்ப்பு தெரிவித்தவர்களுக்கு மரியாதை செலுத்துவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், குடிமக்கள் பெரிதும் மதிக்கும் அரசியலமைப்புச் சட்டத்தை மீறி அடிப்படை சுதந்திரம் நசுக்கப்பட்டதை நினைவுகூறும் வகையில் இந்த தினம் அமைந்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

புதுதில்லியில் 30 நாடுகள் கலந்துகொள்ளும் 64-ஆவது சர்வதேச சர்க்கரை உற்பத்தியாளர் அமைப்பு மாநாடு இன்று நடைபெறுகிறது.

மூன்று நாட்கள் நடைபெறும் இந்த மாநாட்டில், சர்க்கரை உற்பத்தி மற்றும் உயிரி எரிபொருள் தொடர்பான விஷயங்கள் குறித்து விவாதிக்கப்படுகிறது.

இந்த மாநாட்டையொட்டி, உத்தரப்பிரதேச மாநிலம் முசாஃபர்பூரில், உயிரி எரிபொருள் தயாரிப்பில் நவீன தொழில்நுட்பங்கள் பயன்படுத்துதல் குறித்த செயல்முறைகளை சர்வதேச பிரதிநிதிகள் பார்வையிட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மேலும், சர்க்கரை மற்றும் உயிரி எரிபொருள் தொடர்பான, கருத்தரங்கு நாளை தில்லி பாரத் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

<<<<<<>>>>>

தமிழகத்தில் 2026-ஆம் ஆண்டுக்குள் 75 ஆயிரம் அரசுப் பணியிடங்கள் நிரப்பப்படும் என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

சட்டப்பேரவையில் விதி 110-ன்கீழ் அவர் அளித்த அறிக்கையில், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், ஆசிரியர் தேர்வு வாரியம், மருத்துவப்பணியாளர் தேர்வு வாரியம், தமிழ்நாடு சீருடைப்பணியாளர் தேர்வு வாரியம் மூலமாக காலிப்பணியிடங்கள் நிரப்பப்படும் என்று தெரிவித்துள்ளார்.

மாநில அரசு செயல்படுத்திவரும் மக்கள் நலத்திட்டங்கள் மூலமாக கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் மக்கள் பயன்பெற்று வருவதாக அவர் கூறியுள்ளார்.

தனியார் துறைகளிலும் ஏராளமான வேலைவாய்ப்புகள் கிடைப்பதாக கூறிய அவர், கடந்த மூன்றாண்டுகளில் 77 லட்சத்திற்கும் மேற்பட்ட இளைஞர்களுக்கு வேலை கிடைத்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

நான் முதல்வன் திட்டத்தின்கீழ், தமிழக அரசின் தொழிலாளர் நலத்துறையின் மூலமாக நடத்தப்பட்ட சிறப்பு முகாம்களில் இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்ட இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்திருப்பதாக முதலமைச்சர் கூறியுள்ளார்.

தனியார் துறையிலும் வேலைவாய்ப்பு கிடைப்பதற்கு அரசு முயற்சி மேற்கொண்டதாகவும், 2 லட்சத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்திருப்பதாகவும் திரு மு.க.ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>

தமிழக சட்டப்பேரவையில் இன்று கேள்விநேரம் தொடங்கியதும் அஇஅதிமுக உறுப்பினர்கள் அதனை ஒத்திவைக்குமாறு கூறி, அமளியில் ஈடுபட்டனர்.

சட்டப்பேரவையின் மாண்புக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில், அவர்கள் நடந்துகொண்டதாக பேரவைத் தலைவர் திரு அப்பாவு ஒருவார காலம் அவர்களை பேரவை நிகழ்வுகளிலிருந்து தற்காலிக நீக்கம் செய்தார்.

அதையடுத்து, அவர்கள் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

பின்னர் முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின், ஜனநாயக முறையில் எதிர்க்கட்சிகள் போராட உரிமை உண்டு என்றும், கேள்விநேரம் முடிந்ததும் அவர்கள் கவனஈர்ப்பு விவகாரங்களை எழுப்பலாம் என்றும் குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சி என்ற முறையில் அவர்களின் கருத்துக்கள் பேரவையில் பதிவு செய்யப்பட வேண்டும் என்பதால், அவர்களை மீண்டும் அனுமதிக்குமாறு, அவைத்தலைவரிடம், திரு மு.க.ஸ்டாலின் கோரிக்கை விடுத்தார்.

இதனையடுத்து, அவர்கள் இன்று மட்டும் பேரவை நடவடிக்கைகளில் கலந்துகொள்ளக்கூடாது என்றும், அவையின் நடவடிக்கைகளை சுமூகமாக நடத்துவதற்கு ஒத்துழைக்க வேண்டும் என்றும் பேரவைத் தலைவர் கூறினார்.

<<<<<<>>>>>

தமிழகத்தின் நாகை மாவட்டத்தை சேர்ந்த பத்து மீனவர்கள் எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கூறி இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்கள், இன்று இலங்கை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(வாய்ஸ் பைட் - செல்வன் ஜெபராஜ் - 30 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>

மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தலைமையில் பட்ஜெட்டுக்கு முந்தைய ஆலோசனைக்கூட்டத்தின் ஏழாவது அமர்வு இன்று புதுதில்லியில் நடைபெற்றது.

மத்திய இணையமைச்சர் திரு பங்கஜ் சௌத்ரி, தலைமை பொருளாதார ஆலோசகர் திரு வி. அனந்த நாகேஷ்வரன், நிதித்துறை செயலர் திரு டி வி சோமநாதன், உள்ளிட்ட பல்வேறு அதிகாரிகள் இதில் பங்கேற்றனர்.

<<<<<<>>>>>

இந்தியா – எகிப்து இடையிலான விமானப்படை கூட்டு பயிற்சி எகிப்தில் நடைபெற்று வருகிறது.

கடந்த 21-ஆம் தேதி தொடங்கிய இந்த பயிற்சி நாளை முடிவடைகிறது.

<<<<<<>>>>>

ஜார்கண்டில் மாவோயிஸ்ட் அமைப்பை சேர்ந்த ஏழு பேரை காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

அவர்களிடமிருந்து ஆயுதங்கள், மின்னணு சாதனங்கள், இருசக்கர வாகனங்கள் ஆகியவை கைப்பற்றப்பட்டிருப்பதாக அம்மாநில காவல்துறை தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலகக் கோப்பை ட்வெண்ட்டி - ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் ஆப்கானிஸ்தான் அரையிறுக்கு முன்னேறியுள்ளது.

**‘Kingston ’** –ல் நடைபெற்ற சூப்பர் எட்டு சுற்று ஆட்டத்தில் அந்த அணி பங்களாதேஷ் அணியை டக்வொர்த் லீவிஸ் முறையில் எட்டு ரன் வித்தியாசத்தில் வென்றது

முன்னதாக, டாஸ் வென்ற ஆப்கானிஸ்தான் முதலில் பேட் செய்தது.

நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் அந்த அணி 5 விக்கெட் இழப்புக்கு 115 ரன் எடுத்தது.

டக்வொர்த் லீவிஸ் முறையில் 19 ஓவரில் 114 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய பங்களாதேஷ் அணி, 17 புள்ளி ஐந்து ஓவரில், அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 105 ரன் மட்டுமே எடுத்தது.

நான்கு விக்கெட்டுகளை வீழ்த்திய ஆப்கானிஸ்தான் அணியின் நவீன் உல் ஹக் ஆட்ட நாயகனாக தேர்வு செய்யப்பட்டார்.

இந்தியா, இங்கிலாந்து, தென்னாப்பிரிக்கா அணிகள் ஏற்கனவே இப்போட்டியின் அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளன.

----

ஸ்பெயினில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் யுகி பாம்ரி – பிரான்சின் **Albano Olivetti** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

நேற்று நடைபெற்ற காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி - இங்கிலாந்தின் **Luke Johnson** இணையை 6-3, 6-3 என்ற செட் கணக்கில் வென்றது.

**<<<<<>>>>>**